சங்கங்களும் நிறுவனங்களும் இதற்குத் தாராளமாக உதவி செய்து வருவதால், நம் நாட்டில் இதன் மூலம் நிறுவப்படவிருக்கும் கிராமப்புற மற்றும் வேளாண்மை மேம்பாட்டுத் திட்டங்களை நல்ல முறையில் நடத்துவதற்குப் பொருத்தமான பொது சேவை செய்யும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதே இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும் என்று கூறியுள்ளார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : எவ்வளவு உதவி எதிர்பார்க்கப்படுகிறது? பொதுச் சேவை சங்கங்கள் என்பவை எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது தொடர்பாக, மாநிலத்தில் ஒரு தொடர்பு அதிகாரியாக ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இதுபோன்ற அமைப்புகளிடமிருந்து செயற்குறிப்புகளைப் பெற்று, அவைகளை முறைப்படுத்தி 'பாடி' என்கிற அமைப்பிற்கு அனுப்பி அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகிறது. எவ்வளவு பணம் என்பது இல்லை. நாம் அனுப்புகிற செயற் குறிப்புகளையொட்டிப் பணம் ஒதுக்கப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the fact that the Government of Tamil Nadu contemplate the establishment of a Land Army, why is it necessary for us to duplicate such services by encouraging this PADI organisation?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது மைய அரசினுடைய அமைப்பு. மாநில அரசாங்கத்திற்கும் இதற்கும் தொடர்பு எதுமில்லை. அவர்கள் சில கருத்துக்களைச் சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் அந்த அமைப்பினுடைய நிதி உதவியைப் பெறுவதற்கு நாம் இதையும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது.

Tribal Farmers.

* 179 *Q.*—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of farmers who were given high breed milch cattle at subsidised prices under the Tribal Welfare Scheme at Kolli Hills; and

(*b*) the breed of milch cattle which have been given?

1978 மார்ச் 16]

மலைசாதி விவசாயிகள்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கொல்லி மலையில் மலைசாதி மக்கள் திட்டத்தின்கீழ் எத்தனை விவசாயிகளுக்கு மலிவு விலையில் உயர்ரக கறவை மாடுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன ?

(இ) எந்த இனத்தைச் சார்ந்த கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) கொல்லி மலையில் வசிக்கும் 21 மலைசாதி விவசாயிகளுக்கு உயர்ரக கறவை மாடுகள் மலிவு விலையில் வழங்கப்பட்டுள்ளன.

(இ) முர்ரா கலப்பு இனம்	..	..	..	15
ஜெர்சி கலப்பு இனம்	..	..	..	3
சிந்தி கலப்பு இனம்	..	..	..	3

திரு. வி. ஆர். பெரியண்ணன் : இந்த உயர் ரகக் கறவை மாடுகளை நாம் என்ன விலைக்கு வாங்குகிறோம், என்ன விலைக்கு அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்குகிறோம் ? அவர்களுக்கு மொத்தமே சலுகை விலையில் அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கொல்லி மலையில் உள்ள பழங்குடி மக்களுக்கு ரூ. 90,000 செலவில் 60 நபர்களுக்கு மாடு ஒன்றுக்கு ரூ. 1,500 விதம் இரண்டு கறவை மாடுகளை வழங்குகிறோம். ஆகவே ரூ. 1,500 அளவுக்குத்தான் அரசாங்கம் அவர்களுக்கு மானியமாக வழங்குகிறது. என்ன விலைக்கு இந்த உயர்ரகக் கறவை மாடுகள் வாங்கப்படுகின்றன என்ற விவரம் இங்கே இல்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : உயர் ரகக் கறவை மாடுகள் வழங்கப்படும் போது, அவைகளைப் பெறும் நபர்களிடமிருந்து நாம் எவ்வளவு தொகையைப் பெறுகிறோம் ? ரூ. 1,500 மதிப்புள்ள மாட்டை நாம் அரசாங்கத்தில் வாங்குகிறோம். அந்த மாட்டை அந்த மலைவாழ் மக்களுக்குத் தரும்போது, அந்த நபர்களிடமிருந்து நாம் எவ்வளவு பணம் வாங்குகிறோம்? முழுத் தொகையையும் மானியமாக, சகாயமாகக் கருதித் தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கறவை மாடுகளைப் பெறும் நபர்களிடமிருந்து பணம் வாங்கப்படுகிறதா என்ற விவரம் இல்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : இப்போது கொல்லிமலையில் உள்ள நாட்டுக் கறவைப் பசுக்களைப் பொறுத்தவரையில், அங்குள்ள சீதோஷ்ண நிலைமையின் காரணமாக அவைகளுக்கே பால் இல்லாத நிலை இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள பசுக்கள் கன்றுபோட்டாலும், அந்தக் கன்றுகளுக்குகூட கொடுப்பதற்கான பால் இல்லாமல் இருக்கிறது. கன்றுகளுக்கும் கீழே இருந்து இப்போதும் பால் மலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. எனவே இப்போது அரசாங்கம் வழங்குகிற உயர் ரகக் கறவைப் பசுக்களிடம் இந்த கிளைமேட்டில் நல்ல பால் கிடைக்குமா என்பதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டதா? இந்த மாடுகள் அந்தப் பகுதியில் உள்ள கிளைமேட்டுக்கு ஏற்றபடியாக இருக்குமா என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசாங்கம் மாடு மட்டும் தான் வாங்கித் தருமே தவிர, அதிலே பாலையும் ஊற்றித்தராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : கொல்லிமலையில் இப்போது இருக்கிற நாட்டுப் பசுக்களுக்கே பால் இல்லை என்ற நிலை இருப்பதால், இந்தப் புதிய உயர் ரகக் கறவை மாடுகளை நாம் அவர்களுக்கு வழங்கினால், அந்த சீதோஷ்ண நிலைமையில் அவைகளுக்குப் பால் இருக்குமா என்பதைப்பற்றிக் கால்நடை இலாக்கா பரிசீலித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அப்படி ஏதாவது வாங்கித் தரப்படுகிற மாட்டில் பால் வரவில்லை என்றால், அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. மாசிலாமணி : மலை ஜாதியினருக்கு வழங்கப்படுகின்றதைப்போல பழங்குடி மக்களுக்கு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மலை ஜாதி வகுப்பினரும் பழங்குடியினரும் ஒரே வகுப்பினர்தான். 1976 ஆம் ஆண்டிலிருந்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவர்களுக்கு மாடு என்பது மட்டுமல்ல, வெள்ளாடுகள், சேவல்கள், கோழிக் குஞ்சுகள், எருமைகள் போன்றவைகள் எல்லாம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வரப்படுகின்றது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

பாளைய வாரியங்கள் நடத்தும் பள்ளிகளுக்குக் கல்வி மானியம் நிறுத்தி வைக்கப்பட்டதனால் ஏற்படும் இன்னல் குறித்து.

THIRU K. S. GANAPATHI: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the effect of G.O. Ms. No. 23, Education Department, dated 4th January 1978 directing the stoppage of teaching grant to schools run by the Cantonment Boards and the resultant threat of the closure of these institutions resulting in problems to teachers and thousands of parents and students.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1964-65 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தணிக்கை செய்யும்போது தமிழ்நாடு கணக்காய்வுத் தலைவர் (Accountant-General, Madras), நீலகிரி மாவட்டம் அரவங்காட்டிலுள்ள கார்டைட் தொழிற்சாலை உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர் மான்யம் வழங்கியுள்ளதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். இதற்கு அடிப்படை காரணம் உதவிக் கொடை தொகுப்பு (Grant-in-aid Code) விதி 1-லுள்ள ஏற்பாடாகும். இவ்விதியின்படி தனியார் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் மட்டுமே மான்யம் பெற தகுதியுண்டு. இத்தணிக்கை மறுப்பின் காரணமாக மத்திய அரசுத் துறைகளால் இம்மாநிலத்தில் நடத்திவரப்படும் எல்லா பள்ளிகளுக்கும் மான்யம் கடந்த காலம் முதற்கொண்டு நிறுத்தப்பட்டது.

2. மேற் குறிப்பிட்ட பள்ளிகளுக்கு தொடர்ந்து இம்மாநில நிதியிலிருந்து மான்யம் வழங்கும் கருத்துருவை அரசு மிக விரிவாகப் பரிசீலித்தது. மாநில அரசின் நிதி வசதி குறைவானதாலும், மத்திய அரசு நிதியிலிருந்து உதவிபெற்று இப்பள்ளிகளை நடத்துதல் கஷ்டமானதாக இருக்காது என்பதாலும், மத்திய அரசு துறைகளால் இம்மாநிலத்தில் நடத்தப்படும் பள்ளிகளுக்கு, தணிக்கை தடை செய்யப்பட்ட ஆண்டிலிருந்து மாநில நிதியிலிருந்து மான்யம் வழங்குவதை நிறுத்த இவ்வரசு முடிவு செய்து, இதற்கான ஆணையை 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிறப்பித்துள்ளது. கன்டோன்மெண்டு கழகங்களால் நடத்தப்படும்